1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ) : திருப்பூர் ஒழுங்குமுறை விற்பனைக் கூட வளாகத்தில் கட்டிடம் கட்டும் செயற்குறிப்பு அரசின் பரிசீலனையில் தற்போது இல்லை.

திரு. வெ. பழனிசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. திருப்பூர் ஒழுங்கு முறை விற்பனைக் கூடத்தின் மூலமாக கோவை மாவட்டத்திற்கு செஸ் வரி மூலமாக நிறைய வருமானம் வந்துக் கொண்டிருக்கிறது. அங்கே விலை மதிப்புள்ள பூமி இருக்கிறது. காம்பிளக்ஸ் கடைகள் கட்டக் கூடிய சூழ்நிலை வருமேயானால் அதிகமான வருமானம் வரக்கூடிய சூழ்நிலை இருக்கிறது. ஏற்கெனவே இப்படி கட்ட வாய்ப்பு இருப்பதாக அதிகாரிகள் சொல்லுகிறார்கள். ஆகவே, அவை விரைந்து கட்டுவதற்கு அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்,

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. 60 ஆண்டுகளுக்கு முன்பு கட்டப்பட்ட பழைய கட்டிடத்தில் இந்த ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இயங்கி வருகிறது. புரட்சித் தலைவி அவர்களின் புனித ஆட்சியில், புதிய கட்டிடங்கள் பல புதிதாக கட்டப்பட இருக்கின்றன என்பதையும் தெரிவித்துக் கொள்ள ஆசைப்படுகிறேன்,

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 472, திரு. வே. பெரியசாமி, மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர்,

472—

பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிட வசதி,

*5100 திரு. வே. பெரியசாமி: மாண்புமிகு வேளாண்மைத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா :

(அ) பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் வேளாண்மைத் துறை மூலம் இயங்கும் பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு கட்டிட வசதி இல்லாமல், பருத்தி போன்ற பொருட்கள் எல்லாம் மழையில் நனைவதை அரசு அறியுமா ?

(ஆ) ஆம் எனில், எப்போது கட்டிட வசதி செய்து கொடுக்கப்படும் ?

[1992 ஏப்ரல் 3

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) பூதப்பாடியில் ஒழுங்குமுறை விற்பனைக்கூடத்தில் கட்டிட வசதி இல்லாமையினால் பருத்தி மற்றும் விளைபொருட்கள் மழையில் நனையும் நிகழ்வு ஏதும் நடைபெறவில்லை,

(ஆ) கட்டிடம் கட்ட நிலம் கையகப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கிறது.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பெரியார் மாவட்டம், அந்தியூர் தொகுதியில் அம்மாபேட்டை ஒன்றியத்திற்கு உட்பட்ட பூதப்பாடி என்ற இடத்தில் ஒழுங்குமுறை விற்பனைக் கூடம் கட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுவதாக அமைச்சர் அவர்கள் சொன்னார்கள், அந்த பூதப்பாடியில் ஒழுங்கு முறை விற்பனைக் கூடம் இல்லாத காரணத்தால் மரத்திற்கு அடியிலே பருத்தி மூட்டைகளைப் போட்டு ஏராளமான விவசாயிகள் பாதிக்கப்பட்டு என்னிடத்திலே புகார்களைக் கொடுத்தார்கள். விரைவிலே அந்த கட்டிடத்தைக் கட்ட மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஆவன செய்வார்களா என அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு வருகிற பொருட்கள் அன்றைக்கே விற்பனை ஆகிறது. அன்றே விற்பனை செய்யாமல் இருக்கக் கூடிய பொருட்கள் அங்கே உள்ள அறைகளில் பாதுகாப்பாக வைக்கப்பட்டிருக்கிறது. பூதப்பாடி ஒழுங்குமுறை விற்பனைக் கூடத்திற்கு புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு நடவடிக்கையை மேற்கொண்டது. அதன் விளைவாக 3.93 ஹெக்டேர் நிலம் கையகப்படுத்தப்பட்டது. ஆனால் நிலத்திற்கு சொந்தக்காரர்கள் அந்த நிலத்தை அரசுக்கு தர மறுத்து நீதிமன்றத்திற்கு சென்று தடை ஆணை பெற்றிருக்கிறார்கள் அந்த தடை ஆணையை நீக்குவதற்கு அரசு முயற்சிகளை. மேற்கொண்டிருக்கிறது. தடை ஆணை நீங்கியவுடன் கட்டிடம் கட்டப்படும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. வே. பெரியசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விரைந்து நடவடிக்கை எடுத்து தடை ஆணையை நீக்கி அந்தப் பகுதியிலுள்ள விவசாயிகளுடைய கண்ணீரைப் போக்குவதற்கு நான் வணங்கிக் கொண்டிருக்கிற இதய தெய்வம் புரட்சித் தலைவியினுடைய ஆட்சியில் அதனை நிறைவேற்றுவதற்கு விரைந்து நடவடிக்கை எடுப்பார்களா என அறிய விரும்பிகிறேன்.

1992 ஏப்ரல் 3]

மாண்புமிகு திரு. கு. ப. கிருஷ்ணன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தடைகளைக் கடந்து வெற்றி பெற்றது தான் மாண்புமிகு புரட்சித்தலைவியினுடைய அரசு. எனவே இந்தக் கோர்ட்டினுடைய தடையை நீக்கி புதிய கட்டிடம் கட்டுவதற்கு அரசு முயற்சிகளை மேற்கொள்ளும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: வினா எண். 473, திரு. ஆர். தங்கராஜ் மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர்.

473—

ஆதிதிராவிட மக்களுக்கு விவசாயத்திற்கு நீர்மூழ்கி மோட்டார் அமைத்துத் தருதல்

*2958 திரு. ஆர். தங்கராஜ்:

மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சர் கீழ்க் கண்ட வினாவுக்கு விடையளிப்பாரா:

திருச்சி மாவட்டம், ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி, ராங்கியம் காலனி ஆதிதிராவிட மககள் விவசாயத்திற்காக நீர்மூழ்கி மோட்டார் அமைத்துதர அரசிடம் செயற்குறிப்பு உள்ளதா?

மாண்புமிகு திரு. எம். ஆனந்தன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

ஆம் திருச்சி மாவட்டம் ஆண்டிமடம் ஒன்றியம், ஆத்துக்குறிச்சி காலனி ஆதிதிராவிட ராங்கியம் மக்கள் விவசாயத்திற்காக மின் மோட்டார் அமைக்கும் திட்டம் அரசின் பரிசீலனையில் உள்ளது.

திரு. ஆர். தங்கராஜ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே ஆண்டிமடம் சட்டமன்றத் தொகுதியிலுள்ள ஆண்டி மடம் பேரூராட்சியில் உள்ள பல கிராமங்களில் ஆத்துக்குறிச்சி பெரியாத்துக்குறிச்சி, ராங்கியம், கருக்கை, நாகமந்தூர், மெலூக் திருச்சேரி, ஸ்ரீராமன் விழுதுடையான் ஆகிய கிராமங்களில் வாழ் கிற ஆதிதிராவிட மக்கள் தங்களுடைய வறுமையைப் போக்கிக் கொள்வதற்காக 1983 ஆம் ஆண்டு ஆழ்க் குழாய்க் கிணறு வாரியத்தின் மூலமாக, ஆழ் குழாய்க் கிணறுகளை அமைதது கொட்டகை அமைத்து பைப்லைன் போட்டிருந்தும் இதுநாள் வரையில மின் இணைப்பு வழங்கப்படாத சூழ்நிலையில் இருக்கிறார்கள்.